
# சித்ரமுத்துப் பிள்ளைக்க

PUBLIC

2426

87314.



JPL
C2426

...ளியீடு - 1971

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

வெற்றி

25-2.74

சிவநேயச்செல்வரே!

உணவுடலம் விழுவதன்முன் உமது உண்மை வடிவு அறிவெனத்தேர்ந்து ஆனந்தமாயிரும். அதுவே தானவனாகி ஆகாதபடியாயிருக்கும் உபாயம். இதற்கு ஆசான் அருளும் அருளொளிமாதாவின் திருவடியும் இன்னருளின் துதவ எமது வேண்டுதல்.

இம்பின் உரைக்கவினையப் பொருள் உணர்ந்து கற்றலும் பேருதவியாகும். சுபம்.

உமதன்பு மகவாத
அடியார்க்கடியன்
சு. சாந்திகேத.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளொளி வெளியீடு: 4

# சித்ரமுத்துப் பிள்ளைக்கவி

PUBLIC LIBRARY
JAFFNA

ஆசிரியர்
கவிமணி கிருஷ்ணதாசன்

பதிப்பாசிரியர்
அருள் திரு கார்த்திகேசு சுவாமிகள்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

அருளொளிப் பதிப்பகம்
31/21, டோசன் வீதி,
கொழும்பு - 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு 1971
பதிப்புரிமை பதிப்பகத்திற்கே. விலை ரூபா 1/-

# பதிப்புரை

தமிழ் இலக்கியத்தில் பிரபந்த வகையில் ஒன்று பிள்ளைத்தமிழ். இது கடவுள் - குரு - வள்ளள் - முதலானவரை குழந்தை யாகக் கொண்டு காப்பு முதலாக பத்து பருவங்களமைத்து பாடப் படுவது.

தனது ஞான தேசிகனை குழந்தை யாகக் கொண்டு இந்த ஆண்பாற் பிள்ளைத் தமிழை அமைத்துள்ளார் கவிமணி கிருஷ்ணதாசன்.

உத்தமர்கள் போற்றும் உயர் ஞான தேசிகனும் தவத்திரு சித்ரமுத்தடிகள் கருதுவோர்க்காற்ற எளியனாகி, உள்குவார் உள்ளத்து ஒளியாகிக், கவிமணியின் செந்தமிழில் பிள்ளையாகித் தவழ்கிறார்.

தவத்திரு அடிகளாரை தன்னுள் குடியிருத்தி அவருடைய மறைத்தோற்றத்தில் மெய்மறந்த ஒருவரால் அன்றி பிறிதொருவரால் இத்தகைப் பிரபந்தம் ஆக்குதல் அரிது.

இதனை தவத்திரு சித்ரமுத்தடிகளாரால் தொடக்கி வைக்கப்பட்ட அருளொளி இயக்கத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டு வெள்ளி விழாவின் போது வெளியிடுவது மகிழ்விற்குரிய தொன்று.

இந்நூலைப் படைத்தோரும் படித்தோரும் குருபிரானின் இன்னருளிற்குப்பாத்திரனவார்கள் என்பது எமது நம்பிக்கை.

ச. கார்த்திகேசு

அருளொளி அச்சகம், 31 /21, டோசன் வீதி, கொழும்பு-2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கடன்

"தவத்திரு சித்ரமுத்து அடிகளார் மீது, பிள்ளைக் கவி நூல் ஒன்று பாடுங்கள்" என்று கேட்டுக் கொண்டார் தமிழ்ச் சீலர் திரு. மா. செ- மாயதேவன்.

'பாடலாம்' என்று பாடினேன். பிள்ளைக் கவியை, 'பிள்ளைப் பிரபந்தம்', 'பிள்ளைத் தமிழ்' என்றும் வழங்கலாம்.

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை என்ற வருகை, அம்புலி, சிறு பறை, சிற்றில், சிறுதேர்" எனும் பத்து உறுப்புக்களைக் கொணடது இந் நூல். இதனை அருள் சுரந்து பாடியுள்ளேன்.

இப் பிள்ளைக் கவி, தொன்னூல் மொழிகளைத் தெரிந்து தொடுக்குங் கவியாகும். இது ஆண்பாற் பிள்ளைக் கவி.

ஆண்பாற் பிள்ளைக் கவி - மரபின்படி கலி விருத்தத் தான் முடிவது. இந் நூலில் அப்படியின்றிக் கலவையைக் கையாண்டுள்ளேன். காலத்தான் செய்துள்ள ஒரு புதுமை இது!

ஏதோ பாடி யுற்றேன்! நான் முற்றும் படித்த முது தமிழ்ப் பெரும் புலவனல்லன். அருள் சுரந்து பாடுவேன், அவ்வளவுதான்!

நான் எப்போதும் இலக்கணத்துக் கடிமையானதில்லை. இலக்கணத்தைத்தான் எனக்கு அடிமையாக்கிக் கொள்வேன். இதிலிலுள்ள சில கவிகளில் இலக்கணக் குறுக்கீட்டு முடக்கடியையும், அதை அமுக்கித் தள்ளி ஏறி மிதித்து விழுந்து, கவிதைகளை இயக்கிச் செல்வதையும் பார்க்கலாம்.

24266.c
87314C
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்திரு சித்ரமுத்து அடிகளார் ஒரு உயர் பண்புடைய மகான். அவரைப் பிள்ளைத் தலைவராக வைத்துப்பாடுவதிலே தனி மகிழ்ச்சி கொள்கிறேன் நான்.


முற்றுந்துறந்த முனிபுங்க வராகிய தவத்திரு சித்ரமுத் அடிகளார் உயர்ந்த வள்ளலாருங் கூட! எனவே அவரைப் பாட்டுடைத்தலைவராக வைத்து இப்பிள்ளைப் பிரபந்தத்தை பாடியுள்ளேன் என்றால் என்போல்வார் ஏது சொல்ல வியலும்?

பக்தர் குழாத்தினர்க்குப் பெரும் விருந்தாயிருக்க இந் நூலைப் படைத்துள்ளேன். அஃது என் கடன். இதனை இனிப் பயன்படுத்துதல் உங்கள் கடன். இந் நூலுக்கு உயரிய சிறப்புரை வழங்கியுள்ள புலவர் பெருமக்களுக்கு நன்றி கூறுதலும் என் கடனும்.

**கிருஷ்ணதாசன்**

**தைப்பிங்,**
**மலேசியா.**
**13—6—1962**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவத்திரு. சித்ரமுத்தடிகள்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
87314

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சிறப்புப்பாயிரம்

முன்னுள் தமிழகம், சத்தி ஆசிரியர்,

**சொல்லாட்சி மேதை - அறிஞர் சு. நாராயணன் அவர்கள் அளித்தது.**

"பாயிரம் அல்லது பனுவல் இன்றே," என்பது நூல் இலக்கணச் சூத்திரம்,

நூலின் உள்ளே உள்ள செய்தியையும் நூலை இயற்றிய ஆசிரியரையும் பற்றிய விளக்க உரை பாயிரம் என்பது.

ஒரு நூலுக்குப் பாயிரம் வழங்கத் தகுதி உடையவர் மூவர்:-

(1) நூலை இயற்றியவர்தம் ஆசிரியர்;

(2) நூலாசிரியரொடு சேர்ந்து படித்தவர்;

(3) நூலை இயற்றிய ஆசிரியர்.

கவிஞர் கிருஷ்ணதாசர் எனும் பண்டித ஆறுமுகம் மகா கவி சுப்பிரதீப ஆசாரியாரின் கொள்ளுப் பேரர். இவர் ஒரு காலத்தில் என்மாணவருள் ஒருவராக இருந்தமை உண்மை.

குவாலாலும்ப்பூர்த் தமிழ் நேசன் பத்திரிகையில் நானும் பைரோஜி ஸ்ரீநி. நாராயணனும் சுயேச்சையாக நடத்திய கதை வகுப்பில் மேதை எழுத்தாளராகத் தேறியவர்.

இவரை நேரிற் பாராத நான், இவரின் எழுத்துப் போக்கைக் கொண்டு, இவரை உயர்ந்த கவியாகக் கருதினேன். பிறகு இவரை நேரிற்கண்டு பழகும் பேறு கிட்டிற்று.

கவிமணி கிருஷ்ணதாசரின் திறமையில், புலமையில், அன்றும் இன்றும் — எனக்குப் பொருமை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நீங்கள் பாடப் போகிற — கவிகளைப் படிக்கப்படாது — வாய்விட்டு, மனம்விட்டுக், குரல்விட்டு, ஈடுபட்டு, அனுபவித்துத் தாளமிட்டு, ராகங் கூட்டிப் பாடவேண்டும் — இங்கு நீங்கள் பாடி மகிழப் போகிற தொண்ணூறு பாட்டுக்களிலும் என்ன குறை உள்ளன வென்று முதலிற் பாருங்கள். நான் அப்படித்தான் பார்ப்பேன் — பார்த்தேன். குறைகளை மீறி நயஞ்சொட்டுமானால், 'அது பாட்டு', 'அது கவி' என்று கொள்ளலாம்.

குறை:-

(1) புராணங்களில் வரும் செய்திகள் நிறையக் குறிக்கப் பெறுகின்றன.
(2) நூலுக்கு உரிய தலைவரை — சித்ரமுத்து அடிகளை — மிகைபடப் புகழ்ந்திருக்கிறது.
(3) சில இடங்களில் சொற்கள் மறுபடி மறுபடி ஒரே மாதிரிக் கருத்துரைக்க வருகின்றன.
(4) அரிய இலக்கண மரபுகள் அடிக்கடி வருகின்றன.

குறைகளை நான்கு பிரிவாகப் பார்த்தேன்.

இந்தக் குறைகள் அனைத்தும் கம்பனில், திருக்குறளில், ஜீவகசிந்தாமணியில் — தமிழ் உயர் மரபு இலக்கியங்களனைத்திலும் — பெருவாரியாகக் காணப்பெறுகின்றன.

நிறை:-

(1) கவிநயம் வரிக்கு வரி பொங்குகிறது.
(2) ஓசை, சந்தம், தாளம், வண்ணம், தூக்கு முதலியன நிறைந்து, விம்மி நிற்கின்றன.
(3) பூக்கள், ஆபரணங்கள் - முதலிய குறித்த இலக்கிய, இலக்கணங்கள் புது மெருகில், பழம் பெருந் தங்கப் பிழம்பாகக் காண்கின்றன.
(4) பாக்களின் உயர்வு ஒரே தரமாக நிற்பதோடு, மேலேயும் செல்கின்றன.
(5) கம்பன் (ராமாயணம்) புலவர் குழந்தை (இராவண காவியம்) போன்றாரை இடையறாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பூட்டும் நாவன்மை, இசை வன்மை, தாளவன்மை, தொன்மை இலக்கிய இலக்கணப் புலமை வன்மை திகைப்பூட்டும் எண்ணம் அமைந்துள்ளன!

இந்தப் பாக்களில் ஒன்று பாடினாலே இந்த உதவாக்கரைக் காலத்தில் எவனும் ''கவி'' ஆகலாம்.

''நேரின மணியை நிரல்பட நாத்தாங்கு'' ஓரினப் பொருளாகிய சித்ரமுத்து அடிகளை அதி அற்புதக் கவிமணிகளிற் பதித்துக் கற்றோர் மனத்தில் களிநடம் புரியுமாறு செய்வித்த உயர்கவிஞர் கவிமணி கிருஷ்ணதாசரை நாம் நாடோறும் வாயாரப் பாடிப் போற்றுவோமாக.

மொட்டை வசனங்களை வரிவரியாக அடுக்கிப் பொருளின்றி, இலக்கண மின்றி, எழுத்தறிவுகூட இன்றிப் பத்திராதிபதிகளும் படாதிபதிகளும் சினிமாப் பாச்சொல்லி அதிபதிகளும் - இந்தியா, இலங்கை, மலாயா, சிங்கை எங்குமே! இமிட்டேஷன் கவிகளாகப் பேர் போடுகிற கவிநய மறியா இக்காலத்தில் கம்பன்பரம்பரையில் கவி பாடுகிற கவிமணி கிருஷ்ணதாசர் தோட்டப்புறத்தில், குடத்துள் விளக்காக வேண்டிய பணமும் வசதியும் இல்லாமல் வாடுவது அறக் கொடிய நிலையாகும்.

தமிழுலகில் கவிதைகளை மாற்றுரைத்துத் தரம் மதிப்பதில் வல்லமையுள்ள கோஷ்டி ஒன்று முன்பு இருந்தது. இக் கோஷ்டியின் தலைவர் ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார். இவர்காலமாகிய பிறகு தமிழுலகில் கவி மாற்றறியவல்லார் அறவேயில்லை போல் தோன்றுகிறது!

தச்சருங் கொற்றரும் தங்கத்தை மாற்றுரைக்க முடியுமா?

பி. ஸ்ரீ. ஆச்சார்யா, சா. கணேசன், அ. ஸ்ரீநிவாசராகவன் போல்வார் எங்கிருக்கிறார்களோ, தெரியவில்லை!

''தமிழ் நாட்டை'' மூடநம்பிக்கையுடன் காப்பியடிக்கிறமலாயாவில், ரசிகமணி டி. கே. சிதம்பரநாதரே சுவைத்துப் பாடக் கூடிய-உயர்ந்த கவிநூலைச் சித்ரமுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகச் சித்ரமுத்து அடிகளைப் பிள்ளைத் தலைவராக வைத்துத் தித்திக்கப்பாடியிருப்பது மலைத்திருநாட்டுக்குத் தனிச் சிறப்பு!

இந்த அழகிய இலக்கியப் பாநூலை இயற்றியருளிய கவிமணி கிருஷ்ணதாசருக்குக் கவி ரசிகர்கள் சிறப்புச் செய்வர்.

கவிநயம் உணர எனக்குத் தெரியும் என்பதனால் என் சிறப்புரை கேட்டார் கவிமணி. மற்றைப்படி இப்படிச் சிறப்புறப் பாட நான் வல்லேனல்லேன். இவ்வளவு ஆழ்ந்த தமிழறிவு எனக்கு இல்லை!

இது — சித்ரமுத்துப் பா
இது — கவிதை

பாவிமனிதர்களை கடைத்தேற்ற மகான்கள் வருவார்கள்.

தமிழ்ப் பாப் பாவிகளைக் கடைத்தேற்றச் சித்ரமுத்து அடிகள் தோன்றியுள்ளார்.

சித்ரமுத்தர்தம் சித்ரமுத்தராய்க் கவியழகர் — கவிமணி கிருஷ்ணதாசர் இந்தச் சித்ரமுத்துத் தமிழ்க் கவிநூலை ஆக்கியிருக்கிறார்.

விஷயந் தெரிந்த தமிழர்கள் இந் நூலை வாங்கிப் பாடிப் பெரும் பயன் எய்துவர். இது குறுகத் தறித்த தமிழ் இலக்கிய மரபுக் கையேடு.

சிறப்புப் பாயிரம் இப்படி எழுதப்படாது.
அழகுறப் பாட வேண்டும்.

அடுத்த பதிப்பில் அதைச் செய்வேன் — ரசிகர், கடவுள் துணையால்; ஸ்ரீ தட்சணாமூர்த்தி திருவருளால்; ஸ்ரீ சித்ரமுத்து அடிகள் செவ்வியால்.

சு. நாராயணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சித்ரமுத்துப் பிள்ளைக்கவி

## 1 காப்புப் பருவம்

### விநாயகர்

வெண்பா

பத்திப் பெருக்கால் பாடும் பாவியற்றப்
புத்தி புகட்டிப் புரிந்தே — சித்திவி
நாயகனே தில்லை நாதன் திருமகனே
தாயகனே துணையைத் தா. 1

### மலைமகள்

ஆசிரியப்பா

மஞ்சுபடு சப்பையென மருவுநுண் ணிடையில்மணி
மேகலை பிறங்க எழிலார்
மரகதம தாணியொடு வான்மீ னெனத்தரள
மாலையுயர் மார்பு திகழக்
கொஞ்சுபரி புரமினிய செம்பொற் சிலம்புகழல்
குரவையிட வாணி லுலவு
குளிரிளம் பிறைநுதலில் வைடூரி யச்சுடிகை
குலவநற் பணிக ளுடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்சுவை ரத்திலுயர் குண்டலம் வார்செவிகள்
மீதிரவி போலு மசைய
விறல்மேவு மலையில்வரு விமலைபார் வதியன்னை
விழையுமுயர் அழகன் குளம்
நெஞ்சுமகிழ் வாகவளர் நீதகனி யூறல்மொழி
நீடுதவு சித்ர முத்தை
நேயமுட னருகமர்ந் தினியநல் லமுதூட்டி
நித்தமினி தேபு ரக்க. 2

### திருமகள்

தரங்கசக் கரமதனில் வருசலசை தண்டுழாய்
மாலையணி தாமோ தரன்
தனதரிய மார்பினுந் தண்குவளை மலரினுந்
தங்கிவளர் தேவி முன்னுள்
புரங்களொரு மூன்றையும் பொடிபட வெரித்திடும்
புங்கவன் யோக மழியப்
பொருதுமத வேளைமுன் னீய்ந்தபொன் னேயரிய
புனிதமார் ஞான முதல்வி
கரங்களீ ராறுசிர மாறுகற் றோர்கள்புகழ்
கனிமொழிக் குதலை யழகால்
கருதுகமழ் மலரனைய பாதவெமை யாளவரு
கருணைக ரன்கருணை வாழ்
துரங்கமிகு மானுங் குடிப்பதி பிறந்தவெந்
துரைசித்ர முத்து தம்மைத்
துடியிடைத் தோகைக் கருப்பாயி தந்தநல்
துணையெனக் கொள்ள வினிதே. 3

### நாமகள்

வெள்ளிநே ரிதழைவி ரித்தினிய தேறல்தனை
வீசியறு காற்கு நாளும்
விருந்தோம்பு சலசமிசை வீற்றிருந் திடுமமலை
விரிஞ்சனின் தாலு தனிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளினின் றெருசுருதி சொல்லிவளர் கின்றநல்
தோகைஎல் லோர்க்கு மினிய
தோமிலா ஞானவா ரிதியென விளங்கிடுஞ்
சுகிர்தப்ர காச வல்லி
அள்ளிவா னவர்தமக் கமிர்தமது பாலிக்கும்
அரிமருகி அன்னை வாணி
அனுதினமு மடியர்புகழ் அறுமுகனி னியதமிழ்
அடிபணிந் தேத்தி மகிழ
புள்ளிமயி லூருமுய ரழகன் குளத்துவளர்
புகழ்தனுக் கோடி பிரியாள்
போதமுறு மாதரசி யாங்கருப் பாயிபுகழ்
பொன்றுது நன்று காக்க. 4

## வைரவன்

அய்ந்தான னம்நமக் குண்டைந்து தொழிலுமென
ஆஞ்சைவழி யேந டக்கும்
அய்யமிலை நாமரன் பாதம் பணிந்திடுவ
தாகா தெனக் கருதிடும்
சந்தார் தடம்புயப் போதனொரு சிரமதைத்
தான்தரித் தமர ரேத்தச்
சலனமறு ஞமளியூர்ந் தினியதே னெழுகுசெந்
தமிழ்கெழுஞ் சித்ர முத்தன்
நந்தா வளம்எலாம் நாடுமழ கன்குளம்
ஞானதவ யோக குருவை
நாயகன் வானமிர்த மனையதுவர் வாய்க்குதலை
நடமிடுந் தவயோ கியை
வந்தா தரம்புரிந் தேகாக்க வரதஜய
வடுகனின தடிபோற் றிஞேம்
வயிரவா கார்வாசி மீதேறி வருமரிய
வன்மைமிகு காரி யரசே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரபத்திரர்

முண்டகம லர்க்கணுறை வேதனருள் மக்களுள்
மிகுதவ மியற்றி மதியை
முடிமிலேச் சியபரமன் அருள்வரத் தான்மூன்று
உலகமுந் தமதாக்கி முன்
கொண்டகப் பிரமமாய்க் குலவுசிறு விதிமுடி
குறைத்தமரர் வேண்ட வன்பால்
கொச்சைமுடி யீந்துபத் திரையினெடு குலவுமுக்
கண்ணுடைக் கடவு ளேசீர்
மண்டலத் தவர்கள்துதி வரதகுரு வாயமரர்
வாழ்வுதவ வந்த ஜோதி
மாட்சிமிகு கனியமுத மூறுதுவர் வாய்மதலே
மொழிசித்ர முத்த டிகளே
வண்டமர் புரிந்துமலர் மீதிலிசை பாடிடும்
வளமருவு மலேயா சியம்
வந்தவெம் மெய்ப்புலமை வாழவகை செய்திடும்
வரையமலே யருமை மகனே. 6

## அய்யனார்

வெய்யவச முகிவிபுதர் கோன்மனேவி தன்னேயே
விரும்புதன் முன்ன வர்க்காய்
வேண்டியுயர் சசிகரம் பற்றவலி தேவல்புரி
வீரமா காளனேக் கொண்
டுய்யவழி யறியாத அவள்கரத் தொளிர்குருதி
ஒழுகிநில மீதி லோட
ஒளிதிகழ் கட்கத்தி ஞற்குறைத் தும்பர்தம்
உளமகிழ்ந் தினிது போற்றத்
துய்யதண் டாயுதந் தனேயேந்தி வளருமெய்த்
தோமிலா னந்த யோகி
துரியங் கடந்தபர மேசர்துள வோன்தந்த
சுதனுனேத் தொழுத னம்யாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவுயர் புலமைநனி செப்புமழ கன்குளச்
சித்ரமுத் துச்சாமி தஞ்
சிந்தைகுளி ரருளொளிச் சீர்பணி சிறக்கவா
தேசுமிகு சாத்த வரசே. 7

## நான்முகன்

மண்டுநற வொல்முகை யவிழ்க்குமுண் டகமேறி
மதுரநான் மறைகளோதி
மன்னுயி ரெலாந்தந்த மண்பொதுத் தந்தகலை
மாமகள் விரும்பு வரதா
தண்டுகர கங்கரம் கொண்டுறை சதானந்த
தத்துவா தீத முதல்வா
தண்மதி புனைந்தபர மேசனுயர் விழிதனில்
தானுதித் தோங்கு மமலன்
ஞெண்டுமலி தைப்பிங் நகர்ப்பதியி லாடியெஞ்
ஞான்றுமுறை கின்ற பொருளாய்
ஞாலமுறு கனிதேன் கலந்தூறு மதுரமொழி
ஞானியாம் சித்ர முத்தை
விண்டுதரு நான்முகக் கடவுளே விபுதர்தொழ
விரைந்துநீ யேபு ரக்க
வேண்டுமடி யேம்வினைகள் வேரற வவன்பதம்
விரும்பிநின் றேத்த வினிதே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்பல்முகை யவிழவரு காலகுடைந் தினிதேறல்
ஆர்வமுட னுண்டு பாட
அணிமலைக ளழகுபுரி அருமைமலை யாசியத்
தம்மையே சோதி வடிவே
காம்புறள் தோழிவளர் கங்கைகம லாசனிகை
கூப்புவுயர் கனக வரையில்
கருதமரர் மலர்தரக் கழறுமரு ளொளிமன்றக்
கருணைப்ர காச முதல்வா
பூம்புனலி லாட்டிநற் பொட்டிட்டு மணிகள்புனை
பொற்சிலம் பரிய மலரைப்
பொருதுகழல் பூட்டியெம் பெருமாட்டி தன்குயப்
பேரமுதை யன்பு பொங்கத்
தேம்புகனி யூறுமழ கன்குளத் தேசிகா
செங்கீரை யாடி யருளே
தேசுமலி சித்ரமுத் தேவெமது பவமறச்
செங்கீரை யாடி யருளே. 9

எண்ணிலா துயரண்ட கோடிக ளெலாம்வயிற்
றெழில்பெற விருத்தி யீன்ற
எங்கள்பெரு மாட்டிவள ரிமையவெற் பிறைமகிழ்ந்
தேத்தமக ளான வம்மை
விண்ணிலா தவனமரர் வேண்டிநனி போற்றவாழ்
விமலைதரு ஞான குருவே
வேதசுத னேகுமுத விதழிலமு தொழுகவெரி
விழைமலர்த் தொட்டி லேறி
வெண்ணிலா வீசுமெழில் மாமணிவி தானனிழல்
வித்தக ரெலாம் அமுதினை
விழைவோடு ஊட்டவுண் டாடுபர மானந்த
வெள்ளமே அரிய சோதித்
தண்ணிலவு தகதகெனும் அழகன் குளத்தவா
செங்கீரை யாடி யருளே
தனையரெம் வினையறச் சித்ரமுத் தேசாமி
செங்கீரை யாடி யருளே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுமுக் கனியமுத மூறுசெங் காவியிதழ்
கவின்நகை யளிக்க வரிய
கதிர்மதியை மானுமுயர் வச்சிரக் குழைகள்நனி
கன்னங்கள் மீது திகழப்
பண்டுபா லாழிபடு தளரமணி யின்வடம்
பதிந் தகல மீதுபுரளப்
பரிதிநிகர் பொற்சிலம் பிருபாத மலர்களில்
பதிந்து பண் பாடவறுகால்
வண்டுநற வுண்டுமகிழ் நீபமணி மாதவா
வந்திக்க வந்த ஒளியே
வண்டமிழ்க் கவிவலா ரண்டுமழ கன்குளம்
வந்துவள ரமல குருவே
தொண்டுகொண் டடியர்புகழ் சித்ரமுத் தேசாமி
செங்கீரை யாடி யருளே
தொலையாத எம்வினை தொலைத்திடுஞ் சோதியே
செங்கீரை யாடி யருளே. 11

ஆதவன் வரவறிந் தம்போரு கங்கள்முகை
ஆர்வமொ டவிழ்க்க வறுகால்
அளிகள்நற வுண்டுபண் பாடவா னந்தமிகு
அணிபுலமை ஆடல் மிளிரும்
பாதவப் பந்தல்திகழ் பன்னுமழ கன்குளப்
பத்தனே நினது தூய
பாதமல ரன்றியினி வேறுதுணை யில்லையிப்
பாவியா முலகில் வாழ
நீதவரு ளொளிமன்ற நிர்மலா வடியர்புகழ்
நித்தியா னந்த புதல்வா
நிகரிலா மலையாசி யத்தவர்க ளேத்துமுயர்
நிர்மலா னந்த தவனே
மாதரசி யாங்கருப் பாயிமகிழ் மைந்தனே
செங்கீரை யாடி யருளே
மாதவச் சித்ரமுத் தருளுருச் செல்வமே
செங்கீரை யாடி யருளே. 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
87315

வாசங் கலந்தபுன லாட்டிவெண் ணீற்றோடு
வாகுமிகு திலத மிட்டு
வைடூரி யச்சுட்டி வைத்துநுதல் வாய்வளர்
வான்மதியை மானு மரிய
மாசங்கு முதலைந்து படைநிலவு மாணிக்க
மருவுமணி மார்பு புரள
மன்னுபவ ளத்தொளிகள் வீசுமுத் தத்தடியர்
மகிழமுத மூட்ட வரிய
நேசங்க ணிந்தகுமு தத்தினின் றூறுதேன்
நேத்திர மெலாம் நனைப்ப
நிலைபெற்ற நல்லடியர் நின்றுகை கூப்பவரு
நித்திலத் தொளிரு மொளியே
தேசங்கள் புகழுமெழி லழகன் குளத்தவா
செங்கீரை யாடி யருளே
திகழுமுய ரிருசப்ப ரிதயமமர் சீடனே
செங்கீரை யாடி யருளே. 13

மஞ்சுபடு ஜகநாத சாமியுப தேசத்து
மனமது மகிழ்ந்த மருவே
மலையத்தி லேசந்த்ர போஸுதே சியவீர
மணிராணு வத்தி னுருவே
விஞ்சுபுகழ் மலையகமி லங்கைதமி ழகமெலாம்
வேதஒளி யான திருவே
விரும்பியுனை யேத்தவெந் தவமா யுதித்தவொளி
வித்தையே வேத விதியே
நஞ்சுசெறி நாகமுமிழ் மணியிருளை நீக்கவெழில்
நாடுபுக ழழகன் குளம்
நத்திவளர் ஞானகுரு வேநம்பி னோர்க்கமைதி
நல்கிடும் நன்மை வடிவே
செஞ்சுடர்ச் சோதியே சித்ரமுத் தேசாமி
செங்கீரை யாடி யருளே
செயமேவு மலையகக் கவிவலார் துதிபாட
செங்கீரை யாடி யருளே. 14

87315

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

சேலாடு கங்கைவெண் சலையாடு சசியுமுயர்
செஞ்சடா டவி பிறங்கச்
செங்கைமழு வாடமான் கன்றுட வரியசிற்
சபையாடு மா முத்தனே
நூலாடு மிடையுமெழில் வில்லாடு நுதலுமரி
நூபுரப் பொற் சிலம்பும்
நுண்ணறிவி னோர்களும் நுனித்தறிந் தேயினிது
நுவலவறி யாமல் நின்ற
பாலாடு மொழியனைய பதிவிரதை யீன்றபொற்
பாதனே எம்மை யாளும்
பரிதிநற வெழுகுமுத விதழாதி வானவர்கள்
பதமலர் துதிக்க நின்ற
வேலாடு செங்கையான் விழையுமெழில் வண்ணமே
செங்கீரை யாடி யருளே
வித்வமணி சித்ரமுத் துமணிநனி ஞானியே
செங்கீரை யாடி யருளே. 15

முச்சியின் பரிமளக தம்பமல ரசையமுதிர்
மாமணிச் சுட்டி யாட
மிளிர்நுதலில் மதிநிலா வீசமுன் சூட்டிடும்
மேன்மைதரு பொற்பட் டமும்
கச்சியே கம்பனொரு பாகங் கலந்துவாழ்
காட்சியார் காமாட்சி நல்
கமலமல ரனையகழல் சூட்டுமா மரகதக்
கழல்களுயர் கதிர் பரப்பப்
பச்சிளங் கிள்ளைவளர் பாதவக் கோடெழில்
பதிந்தினிது பாட வழகார்
பாவல ரெலாம்பணிந் தேத்துமழ கன்குளப்
பக்தஜன பரி பாலனே
சச்சிதா னந்தபரி பூரணா னந்தனே
செங்கீரை யாடி யருளே
சனதனக் கனமெழுஞ் சித்திரைச் சுழியனே
செங்கீரை யாடி யருளே. 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீகர மெழுஞ்சிந்து மீதுலவு சுத்திதரு
செழுமணிப் பந்த லதனிற்
செய்யதே னூறுமா மலரணைத் தொட்டிலிற்
சேர்ந்துகண் துஞ்சு மமலா
நாகரக மாகநனி நாடிவந் தடிபரவு
நல்லதமிழ் ஞான ஒளியே
நந்தமார் நளினமுயர் தைப்பிங் நகர்க்கணுறை
நல்லவர்க ளினிது போற்ற
மேகரக விழியில்வரு மெந்தைநின தடிமலரி
லிட்டநற் றண்டை ஞெகிழ
எழில்மருவு கனகச் சிலம்பொலி முழங்கவளர்
இறையரு ளணிந்த தவனே
தாகரக மாகப்பண் பாடுமெந் தாதையே
செங்கீரை யாடி யருளே
தங்குகனி யிதழமிர்த மேசித்ர முத்தமே
செங்கீரை யாடி யருளே. 17

உருகியுடல் தளரவிரு கண்ணீ ருகுப்பவுறை
உழுவல ருளத்தி லறிவாய்
ஊற்றெடுத் தோடுபர மானந்த வெள்ளமே
ஓங்குமெந் தமிழ் ரசிகனே
முருகிதழ் விரிக்குமரு ளொளிமன்ற மாதவா
முத்தமி ழுணர்ந்த மகிபா
முத்தனே சித்தனே நித்தனே அத்தனே
முத்திதிக ழாதித் தனே
குருகிளம் பார்ப்பினொடு கூடிவள ரெழில்மருவு
கோதிலா வழகன் குளம்
குலவுமருள் கவிஞனே கோல்தேன் கனிந்தகனி
குளிரமுத முத்த மொழுக
அருகிருந் தாடியொளி யருளமுத மூட்டநனி
செங்கீரை யாடி யருளே
ஆனந்த னேசித்ர முத்தனே சித்தனே
செங்கீரை யாடி யருளே. 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

ஆரண னச்சிறை செய்ய வமர்ந்திடு
அரசின் அருள் மேவும்
அய்ங்கர னுக்கிளை ஆறுமு கத்தவ
னன்பா அமலா மெய்ப்
பூரண ஞானியர் போற்றிட வேயொளிர்
புனிதா விடமே கொள்
பொங்கர வப்பணி யாமுளத் தோடருள்
புதல்வா பொன்னே நல்
நாரண னைத்தொழும் நண்பா நிதிமிகு
நாட்டின் நனி வாழும்
நாகர் புகழ்ந்திட நீப மணிந்தருள்
நாதா எமையா ளாய்
தாரணி போற்றுயர் தகையே மாமணி
தாலோ தா லேலோ
தகுநல் லழகன் குளநகர் வாசா
தாலோ தா லேலோ. 19

மூரிக் கரிமுக ஞர்தம் மருள்பெறு
முத்தொளிர் வித் தகனே
முன்னவ னடிதொழு முழுமுத லவனே
முத்தமி ழுத் தமனே
ஏரிக் கரைதொழு மாதர் படைத்திடு
மெழிலார் அமு துண்டு
எங்கனு மேயினி தாயரு ளொளியாய்
எந்தமி ழிசை பாடும்
வாரிக் குயர்தண் ணீரென வருமுயிர்
வரனே புவி மீது
வண்டமிழ் வாணர்கள் வாழ்த்திடு மரசே
வாழ்வே வள மூறுந்
தாரிற் பொலிபுய னேதமி யரையாள்
தாலோ தா லேலோ
தமிழுய ரழகன் குளநா யகனே
தாலோ தா லேலோ. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கர மோங்கிடு மருளொளி மன்றத்
தய்யா நில மாதி
அய்ந்து மமைத்துறை யமல னளித்தருள்
அத்தா வறுகால் சூழ்
கொங்கவிழ் கோதில் மலர்த்தொடை சூடிய
குன்றே தமி ழோதும்
குணநா வலரும் கோதையர் பலரும்
கூடிக் கவி பாடி
எங்கணு மேயரு ளொளியெழில் பாட்டை
ஏற்றிய எந் தவனே
எளியே மெமையாட் கொளுமா ஒளியே
எந்தா யொளிர் தூய
தங்கரு மழகன் குளமெய்த் தகையே
தாலோ தா லேலோ
தமிழா தவனே தகுமா தவனே
தாலோ தா லேலோ. 21

கற்றவர் கைதொழு தேத்திட வேவளர்
கமல மலர்ப் பாதக்
கனகக் கழல்நனி யோலிட வார்கதி
காட்டிமெய் நட மாடி
நற்றவ ருக்கருள் ஞானவ ரோதய
நாதா உயர் போதா
நதியென வருமரு மமலா நல்லோர்
நலியா வாழ்வு பெறப்
பெற்ற மமர்ந்திடு பெருமா னைத்தொழ
பேதமி லா துதவும்
புனிதா புலவர்கள் போற்றி வணங்கிடு
புங்கவ னேய டியார்
சுற்ற முயர்ந்திடு மழகன் குளமமர்
சுகிர்தா தா லேலோ
சுத்த ரகத்தமர் சித்திர முத்தே
தாலோ தா லேலோ. 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24262C



நித்த நிராமய நிர்மல னருள்மிகு
நீதா உயர் போதா
நீடுத போதனர் நெஞ்சக மாயுறை
நேயா வர மேவும்
முத்தர்கள் போற்றிடு முக்கண ஊனத்தொழு
முத்தா முனி வில்லா
முண்டக னும்புக ழற்புத னேமறை
முதல்வா வரி தான
உத்தம ரென்றுமு வந்தினி தேத்திடும்
உருவே உள மாய
உலகினி லெழில்பெறு மழகன் குளமதில்
உயிரா யுறை பவனே
சித்த முவந்திடுஞ் சித்திர முத்தே
தாலோ தா லேலோ
சீலமி குந்திரு ஞானத் தவமணி
தாலோ தா லேலோ. 23

வண்டு மகிழ்ந்திசை பாடுந் தொடையணி
வரனே வம்பு செயும்
வஞ்சகர் நெஞ்சினி லுறுதொளி யாய்வளர்
வள்ளால் மறை யோதும்
மண்டு புகழ்பெறு மாசறு மற்புத
மணியே மகிழ் நிலவே
மங்கள மார்மலை மங்கைம ருள்திகழ்
மகனே மகிழ்வாய் நின்
தொண்டு புரிந்திடு மெம்மிடி தீர்த்தருள்
தூயா வெழில் மேவும்
துரைக ளகங்களி லேதுயில் செய்திடுஞ்
சுகிர்தா விறல் சேரும்
செண்டுடை சிவனருள் சேரரு ளொளியே
தாலோ தா லேலோ
செந்தமி ழச்சது ரர்க்குப காரனே
தாலோ தா லேலோ. 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கைதன் மைந்த னெனப்புவி யோர்புகழ்
கந்தனி னுயர் போதக்
கற்பக வானவர் கைதொழு தேத்திடுங்
கருணைக் கடலே பார்
அங்கையி லேபெரு மருளொளி தாங்கிடும்
அய்யே இனி தான
அன்பர்கள் தம்மன மனுதின மமர்பெரும்
அருளே மலர் போலும்
செங்கையி லேமழு வேந்துசி வன்மகிழ்
செல்வச் சீர் தரனே
சீர்கொள் கதம்ப மலர்த்தொடை சூடிய
சித்தா புவி மீதில்
சங்கைகொ ளழகுடை யோன்குள நாயக
தாலோ தா லேலோ
சத்திய தத்வம கத்துவ நித்யா
தாலோ தா லேலோ. 25

ஆரண மாதவர் ஆடி யணைத்திடும்
அரசே அருள் மேவும்
அம்புயன் மால்தனக் காதியன் றேயருள்
அமலன் எழி லான
வாரண மாமுக னுக்கிளை யோனருள்
வசியக் குரு நாதா
வம்பர்க ளகமுறை யாது வளர்ந்தெழு
வள்ளா லுயர் ஞான
காரண னேகவி ஞரழ கன்குளக்
கதிரே எமையாட் கொள்
கதம்ப மணிந்துயர் கடவுள்தம் மருள்கெழும்
கருணா சா கரனே
தாரணி மேலரு ளொளி யாரணனே
தாலோ தா லேலோ
தாரு வெனத்திகழ் சித்திர முத்தே
தாலோ தா லேலோ. 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகர் நெஞ்சுறை யாது விளங்கிய
வளமே எமை யாளும்
வானவ னும்திரு வார்கரி மாமுக
வரிசைப் பிரி யோனே
நஞ்சணி கண்ட னளித்திடு மற்புத
நாதா நவை தீர
நான்மறை கற்றறி நாவல நாடொறும்
நாடிடு பூம் பதனே
பஞ்சடி மாதரி ன்றுவர்க டங்குயப்
பாலுண் டமு தாடி
பண்ணவர் பாடி வழுத்திட வேவளர்
படிமே லழ காய
தஞ்சமெ னத்தங் கிடுமழ கன்குளத்
தவனே தா லேலோ
தகையவ ரடிதொழ வருமிறை மகவே
தாலோ தா லேலோ. 27

குன்றுக டோறும் நடம்பயி லுங்குரு
குகனும் கும ரேசன்
கோதறு மாவருள் கொடைகொண் டுயர்திரு
குருவே இனி தாக
என்று மெமக்கருள் செய்திடு மற்புத
எந்தாய் நிறை வாகும்
எவ்வெவ் வுயிர்களு மாகவி ளங்கிய
இறைவன் நிதி மேவும்
மன்று ளமர்ந்திடு மீசன் றிருவாய்
வந்தாய் மறை யோத
மாட்சி மிகப்பெற மாநில மீதினில்
மகிழும் பெரி யோனே
துன்றுய ரழகன் குளமமர் துரையே
தாலோ தா லேலோ
தோமறு சித்திர முத்தா பத்தா
தாலோ தா லேலோ. 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
87315

# 4 சப்பாணிப் பருவம்

## ஆசிரியப்பா

கதிரொளி பரப்புநாத் தகமனைய கருவிழிகள்
கடல்மடை திறந்த தென்னக்
கருணைமழை பொழியவிரு கரதலத் தேந்திபொற்
கவினுலவு மடியில் வைத்து
மதியொளி பரப்பான னங்களின் மருமருவு
மலரிதழில் முத்த மிட்டு
மாருத பேராசை யொடுகருப் பாயிபுகழ்
மங்கைமகிழ் துங்க மகனே
விதியொடுயர் மால்தினம் வேண்டுமுயர் நாயகா
வித்தகா தமிழ்வி வேகா
விபுதர்புகழ் கௌசிகன் விரும்பிநின் றேத்துமெய்
விமலனருள் வேண்டு முத்தா
கதியொளிரு கனதனக் கவினுறு தனுக்கோடி
கண்ஞெளிய தான சித்தா
கமலமல ரனையவிரு கழல்களா லினியவொரு
சப்பாணி கொட்டி யருளே. 29

தண்டையொடு கிண்கிணிக் கழல்சிலம் பிடவரிய
தமனியத் தொளிர் கௌரைஞாண்
தகதகென நுதலிலிடு நித்திலச் சுட்டிதிகழ்
தண்மதியை யெள்ளி யசையப்
பண்டைநாள் மேனைபுரி நற்றவத் தால்வந்த
பச்சிளங் கிள்ளை பாகம்
பதியவுறை யமலனடி பணியுமுத் தாதேவ
பதியுளோர்க் கினிய பத்தா
கெண்டைமீ னேறுமழ கன்குளத் நாயகா
கிளர்குமுத விதழி லென்றுங்
கெழுமமுத மொழுகநட மிடுதனுக் கோடிமகிழ்
கிளையென வுதித்த குருவே
செண்டையிரு கரமேந்து சித்ரமுத் தேசாமி
சப்பாணி கொட்டி யருளே
செகமெலாம் புகழவரு சோதிவழி பாடுயர
சப்பாணி கொட்டி யருளே. 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிலா வீசுமணி மாடத் தனிச்சமலர்
விழிவிரித் தார்வ முடனே
விசையூறு குமுதமல ரணையகழல் மீதுவிறல்
மென்சிலம் போல மிடவே
எண்ணிலா நித்திலத் தெழில்மருவு கண்டிகைகள்
ஏர்கொள்மரு மத் தணிந்து
எதிரிலா வச்சிரக் குண்டல மிருஞ்செவிகள்
என்றுமிரு ளோத் துறக்கும்
விண்ணிலா தவனென விளக்கமுற வேவாகு
வலயஞ் சுமந்து புவிமேல்
விளையாட வருமமல சித்ரமுத் தேரசனை
விற்பன்ன வேத மணியே
தண்ணிலா வுமிழ்தூய வழகன் குளத்தவா
சப்பாணி கொட்டி யருளே
தமிழ்கற்ற கவிஞர்கள் தமக்குதவு தாதையே
சப்பாணி கொட்டி யருளே. 31

மங்குல்சண் டாடுமெழில் மஞ்ஞைஞதனை வாவென்று
மலர்வாய் விளித்து மவிழா
மாதவியின் முகமருவு மஞ்சரி பறித்துமுயர்
மணல்வில்விளை யாட் டயர்ந்தும்
பொங்குமத வாரணக் கன்றுபின் ஞேடியும்
புல்வா யிளங் கன்றுடன்
பூட்கைதரு போதகந் தன்னைப் பிடித்தயற்
புதல்வர்கள் தமக் களித்துங்
கங்குல்பக லோயாத வாடல்கைக் கொண்டுவளர்
கருணைப்ர காச வதனு
கமலைமகி ழழகன்கு ளத்துவளர் கவிஞனே
கருணையரு ளஞ் சோதியே
சங்குதரு மோதைதனி லேபோதை கொள்ளும்நீ
சப்பாணி கொட்டி யருளே
சதுர்முக னுயிர்த்துணைவி சன்மான மேமகிழ
சப்பாணி கொட்டி யருளே. 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியநான் மறைகளிலு மாயதமிழ் நூல்களிலும்
அம்பிகையின் முடிமீ திலும்
அயன்முடியி லுந்தூய வரிமார்பி னுந்தோமில்
ஆதிதிரு மடி மீதினும்
பிரியமா ரன்பர்க ளகத்தினும் புகழுலவு
புலவர்தம் நுண் ணறிவிலும்
பெட்புற வமர்ந்தவுயர் புனிதனரு ளால்வந்த
போதவடி வான முத்தே
எரியனைய விடவரிக ளுமிழ்மணிக ளெழில்தகழி
ஏந்தியிரு ளோட்ட ஞான்றும்
எங்கெங்க ணும்புலவ ரேத்துமழ கன்குளத்
தெந்தையே எழில் மாதவா
சொரியலர்ப் பொழில்குலவு சோதிவடி வானவா
சப்பாணி கொட்டி யருளே
சுந்தர மிகுந்தவரு ளொளிமன்ற நாதனே
சப்பாணி கொட்டி யருளே. 33

சந்திரன் கலைதவழு மணிமாட கூடச்
சரோருகச் சுனையு மரிய
சதுரானன் பதியுமுய ராழிசங் கேந்துதிரு
சலசலோ சனனி னுலகும்
இந்திரன் றனதிடமு மிருநிதிக் கிறையுறையும்
எழில்தவழு மழகை நகரும்
இரவிமுத லானகோள் மண்டலமு மறியுமா
எளியனு மறுமு கன்றன்
மந்திரத் தோங்குநான் மறைமுதல்வ னுனபர
மேசவர கிருபா சனு
மண்டலத் தவர்புகழு மழகன் குளத்தவா
மதுரமுக் கனி மொழியனே
சுந்தரத் துவரிதழ்ச் சித்ரமுத் தேசாமி
சப்பாணி கொட்டி யருளே
சுடர்தரப் பொற்சிலம் பணிதூய னேசுகிர்த
சப்பாணி கொட்டி யருளே. 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்க ளகத்தடத் தூறியலை வீசியெழும்
ஆனந்த வாரியே மெய்
அருள்பழுத் தொழுகுமமு தேயகில மோடுயிர்
அமைத்தவர்க் காதி யாய
இன்பநிலை யேயிமைய வல்லியொரு பாகமமர்
இறைவனருள் ஞான மணியே
இசைமேவு தண்டமி ழுதித்தவக மேலுறையும்
இனிய குருவே சோதியே
உன்பத மெமக்கருள வேண்டுமுடை யாய்தூய
உண்மையே ஒளி மேருவே
உயர்கமல மலரனைய திருவடி சிவந்ததினி
உளமகிழ்ந் தெளிய வடியேம்
துன்பகல வந்திடுஞ் சித்ரமுத் தேசாமி
சப்பாணி கொட்டி யருளே
துரியங் கடந்திலகு சோதியே நீதியே
சப்பாணி கொட்டி யருளே. 35

போரிட்ட பேர்கள்புற மிட்டோட வேசமர்
புரிந்தபஞ் சாயு தர்க்குப்
புகழ்பெற்ற வடியனென வருமமல நாயகா
புணுகினுயர் பொட்டு மிட்டு
வாரிட்ட நித்திலச் சுட்டிபொற் பட்டமெழில்
வளர்நுதலி லினிது சாற்றி
வான்மருவு கற்பகம் போலவள முதவுமிகு
வண்சிலம் போல மிடநல்
தாரிட்ட தண்ணிதிய னேதமிழ்ப் பாடல்புரி
தண்டமிழி லேவல் லவா
தனதனென வெனவிசைகள் தங்கியொலி செய்யுமுயர்
தண்பதி வளர்ந்த தனையா
சீரிட்ட வடியர்பணி செய்யவரு சாமிநல்
சப்பாணி கொட்டி யருளே
செகமெலாம் புகழவரு சித்ரமுத் தய்யனே
சப்பாணி கொட்டி யருளே. 36

24264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுமறு காலுஞிமறு நாளும் பதிந்துவளர்
பசியவெண் டாமரை தனில்
பட்சமொ டமர்ந்தபா ரதிகமலை வாஞெழுகு
பகிரதி மகிழ்ந்து போற்ற
நாடுமம ரர்க்கருள நாகமிசை வருமமல
நங்கை நவை யற்றதூய
நம்பனொடு தருகரி முகன்கருணை யடியவா
நற்றவர்க் கினியே முனியே
காடுமலி யுங்கதம் பன்னரு ளணிந்திலகு
கன்னனே கவிகள் காக்கக்
கருதரிய குருமுனிக் கிளையகுரு வாய்வந்த
கலைஞனே அழகன் குளம்
தேடுமணி யணையவுயர் சித்ரமுத் தேசற்று
சப்பாணி கொட்டி யருளே
திகழுமெய்க் கவிமுறைக ளேத்துமுரு வேதிருச்
சப்பாணி கொட்டி யருளே. 37

## 5 முத்தப் பருவம்
### வேறு

மாலைக் காலத் துதிக்கு மரு
மதிநேர் வதியாம் மாதாவின்
மணமார் களபக் குரும்பை முலை
மலிதீம் பாலுண் டொளிர்பவனே
சோலைக் குயில்கள் சுதி கூட்டத்
துதிசே ரளிகள் கவிபாடச்
சுகமார் பெரியோர் சொற் கூட்டிச்
சுருதிப் பண்பா டிடுமரசே
காலைக் கதிரோன் கீழ்த் திசையிற்
கலையைப் பரப்பி வந்துறவே
கவிஞர் பவளத் தொளி மேவிக்
கனிதேன் கலந்த நின்வாயால்
வேலைக் கரத்திற் றரித்தோ னின்
விபுதா முத்தந் தந்தருளே
விளையாட் டயரா முத் தய்யா
விரைவாய் முத்தந் தந்தருளே. 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

அங்கி யிடுமோ ரரு ளெனவே
அகமே யுருகும் அடியவர்தம்
அறிவாந் தடத்தி லூற் ருகி
அன்பார் திரைகள் தமைவீசிப்
பொங்கிப் பெருகும் ஆனந் தப்
புதுநீர்க் கடலே போதவருட்
புகழே யடியார் பிழை நீக்கும்
புனிதா சித்திர முத்தரசே
கொங்கிற் றிகழ்பூங் கடம் பணியுங்
குருவே ஒளிமிற் பெருமொளியே
குளிர்சந் தொடுகுங் குமக தம்பங்
குரவுங் கமழுந் திருமார்பா
சங்கிற் றிகழழ கன்குள மார்
சத்தே முத்தந் தந்தருளே
சதுரார் தவளம் ஒளிர் பவளத்
தனிவாய் முத்தந் தந்தருளே. 39

பொன்னஞ் சிலம்புசி லம்ப நடம்
புரிபூம் பதனே புவிபோற்றும்
போதா வேதா மனு வடிவாய்ப்
பிறங்கும் புனிதப் பெருமானே
தென்னவ னேதனுக் கோடி தவத்
தெளிவா ரொளியே திருவெளியே
தெய்வப் பொழிலழ கன்குள மார்
தென்ற லெனத்திகழ் திருமகனே
முன்னந் தருந்தீம் பாலு கந்த
முனியே முருகு தவழ்ந்தொளிரும்
முத்தா முத்தர்மு கம் மலர
முதல்வா புலவோர் மிடியலர
வன்னத் தமலன் வரமாய் நீ
வந்தே முத்தந் தந்தருளே
வடிவார் கனிதே ஞர தர
வகைசேர் முத்தந் தந்தருளே. 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக்கைச் சிவையின் கனியை வலி
முகந்தன் பிணுவுக் களிக்கவுயர்
வளமார் கொக்கின் பொழி லமர்ந்து
வருந்தா தருமைக் குயில்கூவச்
செருக்கா லளிகள் தினம் பாடும்
தேசா ரழகன் குளமேவும்
செல்வத் தொளிரும் தவ மாதர்
தினமுந் தொழுகும் திருவுருவாய்
இருக்குந் துறவே எளியோர் தம்
இரவிச் சுடரே எழில்வடிவே
இனிதார் பவளத் தொளிர்தூய
இன்பப் பெருக்கே எம்மரசே.
மருக்கொள் மகிபா மா மலேயே
மகிழ்ந்தொரு முத்தம ளித்தருளே
மறைகட் குரைசொல் மா மதியே
மணியே முத்த மளித்தருளே. 41

பொன்னஞ் சிலம்புசி லப்ப மலர்ப்
பதத்தில் புதிதார் வைரமணிப்
புகழா லொளிர்குண் டலங்கள் செவி
பொலிந்து பிறங்கப் புரிநூல்போல்
துன்னத் தரளத் தார் மார்பில்
துகடூர் அரைக்கிண் கிணிபுலம்பத்
துதிசேர்ந் திடுமா ணிக்க மரித்
தொடிபைங் கரத்துற் றுறையநிதம்
சென்னெற் கழனி செழித் தாடும்
தேசா ரழகன் குளப்பதிவாழ்
செல்வா உயர்சித் திரை முத்தே
திஞகர ஞயிவண் திகழ்பவனே
கன்னல் மலர்த்தேன் கலந்த பெருங்
கனிவாய் முத்த மளித்தருளே
கமலத் தொளிர்கலே மகள் மகிழும்
கண்டே முத்தந் தந்தருளே. 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுக் குழாங்கள் நனி கூடக்
குயில்முன் கூவிச் சுதிமீட்டக்
கூடி யளிநின் றிசை பாடக்
குலமா னினங்கள் நடனமிட
அருகே யமர்ந்து கவி தாளம்
அழகாய்ப் போடும் அன்புருவே
அத்தா முத்திக் கொரு மகனே
அருளே அடியா ரரும்பொருளே
பெருகுங் கருணைப் பெருங் கடலாய்ப்
பிறங்கும் பரமன் றிருவரமே
பொன்னே பொன்னஞ் சிலம் பலம்பும்
புகழ்பூம் பாதா புவியமுதா
முருகு தவழ்பூங் கடம் பணியும்
முத்தா முத்த மளித்தருளே
முனியா முனியே மூர்த்தி கனே
முதுதூ முத்த மளித்தருளே. 43

வாடுங் கொடியின் மழைபொழிய
வருஞ்சீ மூதமெ னத்தேவர்
வருந்தா துலகில் வளைக்க வரும்
வரதா சோதித் திருவரையே
கோடுங் கலை யும் கவிதை வளம்
கூடுஞ் சுரர்கள் பாடவளர்
கொக்கில் குயில்கள் கூவ நிதம்
குளிர்தவ மழகன் குளத்தோனே
நாடுங் கவிவல ஞறு முகன்
நனிநின் றேத்தும் நாயகனே
நறவார் நீபத் தொடை யணியும்
நாதா நீதச் சேதாம்பல்
ஏடுங் கடலா ரிரும்ப வளத்
தெழில்வாய் முத்தந் தந்தருளே
எதிர்வே றில்லா எந் தாதா
இனிதொரு முத்தந் தந்தருளே. 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

வண்டுபடு தரளநகை மாதரிரு மூவர்தம்
வளைக்கரந் தாங்க வவரின்
வார்குயத் தமுதுண்டு வாமம் விளங்குமது
வழிமலர்த் தொட்டி லேறிக்
கண்டுபடு கிழவிநனி காட்டிநட மாடிவளர்
கருணைப்ர காச வதனு
கனகமழை யெனுமமிர்த தமிழினிமை பொழியெளிய
கவிசுளைக் காக்கு மரசே
ஞண்டுபடு மழகன்கு ளப்பதியில் நாளுமுறை
ஞானவடி வான குருவே
ஞாலத்தி லேகவிஞ னேழையெற் கேவலிய
ஞாதியாய் வந்த தருவே
பண்டுபடு நற்றவர்க் கேயினிய பானுனேர்
பண்புக ளுயர்ந்த பரமே
பகருமுத் தமிழறிஞர் பார்தனிற் பாடுமெய்ப்
பாதனே வருக! வருக! 45

கொங்குலவு குவளைமலர் மீதுகுடி கொண்டுவாழ்
கோதை யகலாது காக்கக்
குறைவிலா நிதிமருவு மணியாட கூடநிரை
கொழுவுநற் றுவசு நிறைகள்
மங்குல்சூழ் நாகர்பதி தனையெள்ளு மாறென
மதிக்கநனி யாட ஞான்றும்
மகரால யஞ்சுற்று மலையாசி யத்துயரு
மதிவொளிய தாக வந்தே
தங்குமா ரணமுதல்வ ஞகித் தழைத்திலகு
தாதையே சித்ர முத்தே
தண்டையொடு கிண்கிணி முழங்குநடை யழகனே
தமிழுக் கிரங்கு பவனே
எங்குமா கியவீச னருள்மேவு மையனே
எம்வினைக ளகல வருக
எழில்மருவு மிறைவனருள் பொழிலமரு மெந்தையே
இங்குநீ வருக! வருக! 46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகத் தருள்மேவு கமலமென் பாதமேல்
கழலொளிசி லம்ப ஞான்றும்
ககனவா னவர்கள்கடி மலர்கொண்டு தொழுதிடக்
காட்சிமிகு விடையி லேறும்
நற்பகவ னுக்குநான் மறைமுதற் பொருளோது
நாயக னருட் கண்டுறுப்
நான்மறைக் கடவுளடி நாடிவளர் நாடனே
நாத வேதாந்த நலமே
சிற்பரை தனக்கிளைய மைந்தனுந் தேசுமிகு
செவ்வியோ னக வடியனே
செல்வமா ரழகன்கு ளத்ததி லுறைந்திலகு
சித்ரமுத் தேசோ தியே
அற்பர்கட் கறிவுறு தோங்குமவ னடிபேணும்
ஆதியே இனிது வருக!
ஆனந்த மாகுமொளி அந்தணு வடியர்பால்
ஆவலாய் வருக வருக! 47

செஞ்சிலம் போலிடச் சஞ்சாளி கக்குரல்
கிண்கிணிகள் சேர்ந் தொலிப்பச்
சீமுத மரியநற் றுருவென வேகருணை
செய்மலர்ப் பாத மதனுல்
அஞ்சிலம் புகள்தோறு மாடுமுத் தாவாதி
அய்ங்கரற் கினிய பக்தா
அற்புத சடாடனன் வருமறை தினங்கமழு
மானந்த ஞான மதியே
நெஞ்சிலம் போருகன் நித்தமு மமர்ந்திடும்
நீததவ னேமே ருவே
நேயமிகு நற்கவிவ லார்தமக் கீயாத
நீசர்கள் தமைச் சபிக்கும்
அஞ்சிலம் பேந்துசடை யான்கொஞ்சு மய்யனே
அடிரெம் மருகில் வருக!
அறிஞர்கட் கரசருள வளரமல வடிவாய
அன்பனே வருக வருக! 48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணிலரி வரவுகண் டுயர்வாரி சம்முகை
விரிக்கவறு கால் குடைந்து
வீசுமக ரந்தமுண் டிசையெழும் பொய்கைசூழ்
வைகைவளர் நாட்டி லந்நாள்
எண்ணிலரி யாசனத் தேறியர சாண்டுபுகழ்
எங்கட் கிருத்தி யழகால்
எதிரிலா வேதமுடி வாகித்து தைந்துறையும்
எந்தையை யேத்து முருவே.
மண்ணிலரி வடிவான மாதவன் றனதரிய
மைந்தனே மாசி லானே
மாட்சிமிகு மடியர்வா ழழகன் குளப்பதியில்
மருவுமெந் தமிழ் ரசிகனே
புண்ணியா வேழையெம் வினையகல வேயருள்
புரிந்தாள வினிது வருக!
போதகவி வாணர்புக ழீகைவடி வாயமெய்ப்
புங்கவா வருக வருக! 49

பிண்டிபா திரியுங் குருந்தொடு பலாசுகவிர்
பூதவங் கோலி சம்பு
பெட்புமிகு பழுமரஞ் சுள்ளிபுக ழார்மலர்ப்
பொழில்கள் புடை சூழவரிய
கண்டிணைப் பொருதுகுயில் கூவச் சுரும்புசீர்க்
கலையுணர்ந் தினிது பாடக்
கலாபம் விரித்துமயி லாடுமழ கன்குளக்
காவலா நினது பாதம்
அண்டினோர்க் கில்லையென் ஞுதுதவு வள்ளலே
அடிமையா முனை யழைத்தால்
அன்புகூர்ந் தினிதுவந் தாதர வெமக்குநனி
அருளா திருப்ப தழகோ!
எண்டிசையு மேத்துமெம் பாட்டுடைத் தலைவனே
எந்தமிழ் ரசிக்க வருக!
இன்பமய மேயிதய வானந்த வாரியே
இக்கணம் வருக வருக! 50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனெழுகு கமலமல ரனையசீ றடிகளில்
செம்பஞ் சினங் குழம்பு
திகழநனி பொற்சிலம் பொலியிடத் தீதிலா
தொளிர்மணி சிலம்ப வானின்
மீனெழுகு மாறுநவ மணியழுத் திடுமௌலி
மேல்சிரம் மீதி லோங்க
மிளரரிச் சுடிகைமணி யாரமுயர் தரளமதில்
மேன்மை தரு வாகு வலயம்
வானெழுகு மமுதனைய வுபவீத மோடரிய
மணிவடம் மார்பு புரள
வச்சிரக் குழைகளீ ரொளியுதய ஞாயிறென
வார்செவிகள் மீதி லசையக்
கானெழுகு மயிலினங் கூடிவந் தாடலைக்
கண்டுகளி கூர வருக!
கடையரெம் பவமறுத் தாளவடி வாய்வந்த
கண்யனே வருக வருக! 51

கொண்டல்படு தரளமொளி வீசவான் குலவுசசி
குளிர்நில வுதித்த தென்று
கோதில்பழ னத்தில்வளர் குமுதமுகை யவிழவுறு
கால்ஞிமுறு கண்டு மகிழ்பாய்
வண்டல்மிகு கேதையலர் தனைவெறுத் தினியதேன்
வாய்முகந் துண்டு தூய
வரிமிகுந் தமிழாட வல்லகவி மணியாட
வன்புக ழெழுத்து மாடப்
பண்டலந் தனிலாடு பாவலர்க ளோடுமெய்ப்
பக்தகுழு வினர்க ளாடப்
பத்திநெறி முறைதழுவு புத்திமுறை சித்திபெறு
பண்டிதர்க ளொன்று கூடத்
தண்டனிட் டோமரிய வழகன் குளத்தமரும்
தங்கமே இனிது வருக!
தீவினையி னேம்மிடிகள் தீரவிவ் வேளையெந்
திங்களே வருக! வருக! 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87314

கதிமேவு சசியிளங் கதிர்கண்டு காவிமுகை
கதவைத் திறக்க வறுகால்
கரும்புள் தனக்குணுக் காட்டிச் சிலீர்முகங்
கருதுமிசை பாட வென்றுந்
துதிமேவு சுப்ரதீ பக்கவி பரம்பரையில்
துரையாக வந்த புலவன்
துணிவேறு தொல்பதச் சண்டமா ருதமான
துகளிலாக் கவிமணி தனின்
விதிமேவு வமலவடி வாய்நின்ற வித்தகா
விற்பனர் விழைந்து வாழ்த்தும்
வேதனே ஞானபரி பூரணு னந்தவி
வேகனே எம்மை யாட்கொள்
நிதிமேவு மௌளிவரிசை நித்தமுந் தொழுதுபணி
நீதிபதி யேவ ருகவே
நீடுபுகழ் தேடுமழ கன்குளத் தோடுவளர்
நித்தனே வருக வருக! 53

மகரால யத்தில்வரு தருவார ணங்கள்தமை
மாசறக் கொண்ட மகிபன்
மனமருண் டுயர்மலர்க் கொக்கேறு பரவுட்ட
மாயெழிலி மருவு பொழிலிற்
பகரால மனையசூர்க் கஞ்சியவ னடிபரவி
பற்றுவோர்க் கேயிரங் கிப்
பரிதிநிகர் வேலேந்தி யமராட வந்தவுமை
பட்சமே வேள்வி வந்த
தகரா லருந்தவர்க் குண்டாய துன்பமது
தானகல வொரு பரியெனத்
தனியேறு மையனின் அடியனே எமதரிய
தாழ்வினை யகற்று மரசே
நகரா லயத்தில்நனி யழகன் குளத்துவளர்
நாயகா நாடி வருக
நாதாந்த சோதியே சித்ரமுத் தேசாமி
நாடிநீ வருக வருக! 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 அம்புலிப் பருவம்

### ஆசிரியப்பா

பரவிந்த னத்திலெரி போற்காமு கர்க்குளம்
பதறவெங் கலையை வீசிப்
பகருடு வினத்தினுக் கரசனென வலைகெழுமு
பாற்கட லுதித்த பதியார்
உரவிந்த மெனவிலகு மழகன் குளப்பதி
உகந்தினித மர்ந்த உயிரே
உம்பர்புகழ் தன்தாதை சிரமதி லுறைந்ததோர்
உண்மையை யறிந்தோ வரம்
தரவிந்த வேளையி லழைத்ததோ உன்மரபு
தானுந் தழைப்ப தற்கோ
தண்கவி வளர்க்கவரு தாதையென வேகவிதை
சாற்றுமொரு வாய்மை கேட்டோ
வரவிந்த பாதமுத் தேயுனை யழைத்ததால்
அம்புலீ ஆட வாவே
அந்தமிழ்க் கவிசொல்ல வல்லவா நல்லவா
அம்புலீ ஆட வாவே. 55

விண்ணிலா தவனுடை வெம்மைநீங் கிடவரிய
வெண்கதிர் விரித்து ஞான்றும்
விபுதருக் கோராழி யமுதீந்து விண்டுமலர்
வேதனும் காண நின்ற
வெண்ணிலா இறைவனுயர் சடைவீற் றிருக்கின்ற
எழிலதை யறிந்தோ தினம்
எங்கணும் புகழ்மருவு மழகன் குளத்திலுறை
எங்கள்குரு வேவள் ளலே
மண்ணிலா டற்கினி தழைத்ததால் மாட்சிமிகு
மதியமிள் வேளை தனிலே
மலையில்வரு மமலைதிரி புரைமைந்த னருளதனை
மனமதில் நினைந்து மகிழ்வாய்த்
தண்ணிலா தனைவிரித் தரியதவ யோகமோ
டம்புலீ யாட வாவே
தருவனைய கருணையொளிர் திருவருளு மொளியினோ
டம்புலீ யாட வாவே! 56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவந் தனையாற்று மத்திரியி னம்பகத்
தின்புற வுதித்து மரிய
இப்புவியி னோர்கள்புக ழங்கியா னனமீதும்
இணையில்பா லாழி யதனில்
பொருந்துசீ ரமுதமொடு தித்தமெய்ப் புதல்வனைப்
புலவர் புகழ் வாய்மை கேட்டோ
புனிதவெண் மதிபொழியு முன்னுடற் பொலிவினைப்
புந்தியி லிருத்தி யோமெய்
மருந்தனைய மண்ணவர்கள் மகிழுமழ கன்குளம்
மன்னவா நின்னை இன்று
மனமகிழ்ந் தினிதழைத் தனமமல னதையுனது
மனமதி லிருத்தி யின்றே
அருந்தவர்கள் தொழுதுபணி சித்ரமுத் தேநன்கு
அம்புலீ ஆட வாவே
ஆனந்த ஞானமரு ளொளிமன்ற ஆளுநா
அம்புலீ ஆட வாவே! 57

(ஆளுநா — ஆள்பவனே)

பனிப்பகைவ னுக்கரிய துணைவனென வேபிறந்
தப்பனிக் குயர் தோழமை
படியினிற் கொண்டுகுரு பத்தினியை மருவியோன்
பாலனே சித்ர முத்தா
தனிப்பெரும் புலவனென அறிஞர்பலர் சாற்றிடும்
தன்மைதனை முன மறிந்தோ
தள்ளாத முத்திநீ யென்பதை யுணர்ந்துகோ
தற்பரா னந்த உருவாய்க்
கனிப்பொழில்கள் சூழ்ந்திடுமி ராமநா தப்புரக்
காட்சியா ருன்னை யுலகில்
கண்டுமகிழ் வோடினி தழைத்ததா லேயினிக்
காலதா மதமின் றியே
அனிச்சமல ரனையபத வழகன் குளத்தவா
அம்புலீ ஆட வாவே
அழகுமிகு மலையாசி யக்கவிதை பொழியவிங்
கம்புலீ ஆட வாவே! 58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடத்துநீர் தன்னிலுங் கோதில்பல மச்சங்கள்
கூடிவாழ் பொய்கை களிலும்
குழிநீரி லுங்குற்ற மார்சலத் திடையிலுங்
குரைகட லிடத்து மரிய
தடத்துநீர் மீதிலுந் தங்கிவாழ் கின்றவுன்
தன்மையை யறிந்த தாலே
தாதவிழ் மலர்க்கொன்றை தனையறிந்திடுபரன்
தாளிணை யடைந்த நின்றன்
இடத்துமெய் யன்புநனி பூண்டழைத் தோமுலகில்
இசைமேவு மறிஞ ரேத்தும்
இனியவான் மச்சாந்தி நிலையவழ கன்குளத்
திதயமே எழி விரவியே
நடத்தைவிட் டிங்குஉன் னருளொளி யுடன்தூய
அம்புலீ ஆட வாவே
நத்துமவ் வாத்துமச் சாந்திநிலை யத்தலா
அம்புலீ ஆட வாவே! 59

இன்றுபோ லென்றுமில் லாயெழிள்கொல் மாடமும்
இனியமலர் மிகு பொழில்களும்
இந்திரன் முதலாய தேவர்தம் பதிகளினும்
இடைவிடா தேனே டுருய்
ஒன்றுசொல் வோம்கேட்டு மதியமே வோதுநான்
மறைமுதற் பொருள தாகி
உலகெலாந் தானுயு றைந்துயிர்க் குயிராகி
ஒன்றுபல வாகி நிலமேல்
நன்றுநின் றன்பர்நனி போற்றவருள் செய்திடும்
நாதநா தாந்த முதலாம்
நாயகன் பாதமலர் நத்துமுன் கலையெலாம்
நாடொறும் வளரு மன்பால்
அன்றுமலை வல்லிதரு மருமைமக னடியனே
அம்புலீ ஆட வாவே,
ஆனந்த மேவுமழ கன்குளத் தாதவா
அம்புலீ ஆட வாவே! 60

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்பிறந் தோனமரர் கசக்கிப் பிழிந்தமிர்த
கவளமினி துண்டு மகிழக்
கட்செவி கடுக்கொளெயி றுற்கடித்த தின்னுயிர்
கலங்க வெழி லேமிகுந்த
உடற்குளுறு மூனெலா முண்டபின் னுச்சிட்ட
மெனவுமிழ் நில மீதிலே
உறுமாம னிடுசாப மொன்றினுக் கஞ்சியுமை
உடையனுய ரடிபோற் றியும்
இடர்ப்பிணி யகன்றதிலை யின்றுநனி வளர்வதுந்
தேய்வதுந் தொழி லாகவே
இருப்பதா லெந்தையே உமையழைத் தோமறிஞ
ரேத்துநல் லழகன் குளத்
துடற்கெழுந் திடுசோதி தாங்கவரு மண்ணலே
அம்புலீ ஆட வாவே
தண்கவிதை யோதுதமி ழழகுகண் டகமகிழ்ந்
தம்புலீ ஆட வாவே. 61

உன்னைரவி தன்னைநல் லுலகெலா முலவும்
உதாசனனை யொளிகொள் வானின்
உடுவினங் களையருளு மொருபரன் மகனிங்கு
ஒருதர மழைத்த போதே
பொன்னைநே ரவனடிப் போற்றவா ராதபிழை
பொறுப்ப தரி தாகுமய்யன்
புகல்வனே லுனதுபகை பூண்டபணி வந்துனைப்
பேருலகி லேவி ழுங்கும்
மின்னையுமி ழறிவேந்த வருமருட் சோதியாய்
மிளிர்வேத போத முடிவாய்
மேதக்க புலவர்புக ழழகன் குளப்பதியில்
மேழிகொள் ளுழவ ரேத்தும்
அன்னையெனு மக்கருப் பாயிமகி ழறிஞனே
அமபுலீ ஆட வாவே
அரியதற் கரிதாகு மந்தமி ழிசைக்கநீ
அம்புலீ ஆட வாவே! 62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமனைவி தன்னைமுன் கூடிமால் தனையீந்த
கொடியனின் செயலை நோக்கிக்
கொங்குலவு கஞ்சமவன் வரவுகண் டாலுமுயர்
குளிர்முகை விரிப்ப துண்டோ?
திருமருவு தக்கனின் மக்களிரு பானேழு
தெரிவையரை யவன் மணந்து
தேசுமிகு ரோகணியி னோடமர்ந் தானெனத்
திசைமுகன் மைந்த னோர்ந்து
உருமமென வேயிட்ட சாபந் தொலைத்திலா
தென்னவுல கேத்து முதல்வன்
உனையழைத் தானரிய வழகன் குளத்தலத்
துறைகின்ற உழுவ லன்பார்
அருமறைப் பொருளாய ஆதித்த னேயிவண்
அம்புலீ ஆட வாவே!
ஆறுமுகனி னரியதமி ழணியுடைத் தலைவனே
அம்புலீ ஆட வாவே! 63

## 8 சிறுபறைப் பருவம்

அலைபட்ட வாழிவா யோதைவா னெழிலிமிழ்
அசனியு மடங்க வரிய
அண்டம் வெடித்ததென வமரர்கள் நடுங்கவுயர்
அகிலஞ் சுமந்த வரிதன்
நிலைபட்ட தெனமணிகொள் நெடுமுடி யசைக்கநிறை
நிலவிரவி கதி மாறவும்
நித்தநிர் மலஞான வத்தனரு ளொளிமோன
நீதகுரு வேஞா னனே
கலைபட்ட மறைமுதற் கடவுட் கடாட்சமே
கண்டனருள் ஞான குருவாம்
கார்த்திகே யன்கருணை கொண்டுலவு மடியனே
கருணைப்ர காச முகனே
சிலைபட்ட சேனைபுகழ் சித்ரமுத் தய்யனே
சிறுபறை முழக்கி யருளே
செஞ்சிலம் பசையநற் சீறடி பெயர்த்துமெய்
சிறுபறை முழக்கி யருளே. 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தமுத் தமுழறிஞர் முறைமுறை பணிந்தேத்து
முதல்வனென வந்த முனியே
முண்டகத் தருளொளியின் மன்றத்து ளாடுமெம்
மேதக்க தூய ஒளியே
நந்தமலி நீபமலர் மார்பனே நகரெலாம்
நற்றவர்கள், நின்று தொழுவோர்
நாடுபுகழ் தூயவழ கன்குளத் துறையுமா
நலமிக்க ஜீவ ஒளியே
பந்தமறு பத்தர்தொழ நின்றவுயர் மேலவா
பரிதிநிகர் சித்ர முத்தா
பார்த்னே யளந்தமாற் கரியமரு கோனடியர்
பதமலர் தொழும் பக்தனே
சிந்தவெழி லெங்குமெந் தேசிகா செப்பருஞ்
சிறுபறை முழக்கி யருளே
சித்தம துவந்துபொற் கோடுகொண் டேயினிய
சிறுபறை முழக்கி யருளே! 65

கும்பக களிற்றுமத வாரணக் கடகங்கள்
குமுறியெழு மோதை யெனவும்
குறைவிலா துயரசர சரமது குலாவிடும்
கொற்றமார் நேமி தன்மேல்
பம்பக் களித்தெழும் பேராழி யிதுவெனப்
பகரவெஞ் ஞான்று போதை
படரநற் கோடொன்று பொற்கரத் தேந்திமெய்ப்
பானுமதி கதிமாற நல்
நம்பனுயர் அருளதும் கருணையும் பெற்றவுயர்
நல்லவரு ளொளி மன்றனே
நளினமிகு விசுவக் குலம்புகழ வந்ததமிழ்
நற்கவிதை நாளு மேத்தும்
செம்பவள உண்மைமொழி சித்ரமுத் தாசாமி
சிறுபறை முழக்கி யருளே
செஞ்சிலம் பொலியிடத் திருவடி பெயர்த்துநீ
சிறுபறை முழக்கி யருளே! 66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



பூதமுதல் வாதேசு மேவுயர் பிறங்கல்வரு
பூவினுக் கினிய புதல்வா
புண்ணியா புலவர்புகழ் கண்ணியா புகலுமறை
போததவ ஞன மகனே
நாதமுத லாய்நின்ற நம்பனின் சாயலே
நாடியாம் பணி முத்தமே
நளினமிகு மலையாசி யத்தமிழர் நாரொக்க
நாடிநின் றேரும் நலமே
வேதமுதல் வித்துநிகர் அழகன் குளத்தவா
விஞ்சைப்ர தாப விதையே
விரிதிரைக் கடலிலரி துயில்செயும் நாராணன்
விரும்புநல் லருள் விளக்கே
சீதமுத மனையநின் திருவடி யெமக்கீந்து
சிறுபறை முழக்கி யருளே
செகமெலாந் தெரியவரு ளொளிதந்த செம்மலெ
சிறுபறை முழக்கி யருளே! 67

அண்டங்க ளத்தனையும் வாழுநற் சரவசரம்
ஆனவுயிர் யாவு மடமுன்
ஆர்ப்பரித் தெழுமாதி யோதையினை மகன்விசும்
பமர்ந்துயிர் துடைக்கு மேழு
கொண்டலுமி ழசனியென வமரர்முதல் யாவரும்
குடர்நடுங் கிட வுளத்தால்
கோதிலா நான்மறைகள் கூறவரு குமரகுரு
கோடுபோல் கரமேந்தி யோர்
மண்டல மெலாந்துதித் திடநின்ற மதியுளார்
மனத்தைப் பறித்த மனிதா!
மதிமுதற் கோள்கள்நிலை மாறிவர ஆரமென
மன்றமதெ ழுந்த மணியே!
சண்டனுயிர் கொன்றமெய்ப் பரமனருள் கொண்டநீ
சிறுபறை முழக்கி யருளே!
சர்ச்சனர் வழுத்தவரு சித்ரமுத் தழகனே
சிறுபறை முழக்கி யருளே! 68

24260 C.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சூட்டு வாளெயிறு நக்கும் பணிப்பாயல்
நாடொறுந் துஞ்சு நமரன்
நாரண னரக்கர்குல நாயகன் றனையட்டு
நவையற வறைந்த முரசம்
மஞ்சூட்டு மசனியும் மறிகடற் குரவையும்
மன்னுபல கரி யோதையும்
மறையவான் முகடதிர மதிமுதற் கோள்களும்
மருவுபதி விட் டகலவும்
நெஞ்சூட்டு மார்வமொடு நேயமிகு மமரர்கள்
நினைந்தூட்டு மமுத மிதென
நிலைபெற்ற குமுதவிதழ் நின்றொழுகு தேறல்நெடு
நிலமது நனைக்க நலமார்
செஞ்சூட்டு வாரணந் திகழுமழ கன்குளச்
சிறுபறை முழக்கி யருளே!
சித்தமகிழ் வாநகற் சித்ரமுத் தாவந்து
சிறுபறை முழக்கி யருளே! 69

காரினிற் பொலியசனி போலுமெழில் மேவிடுங்
கமலநிகர் கழல்க ளதனிற்
கனகச் சிலம்புகள்க றங்கவா னவர்கடங்
கமழமிர்த மோடு கனிதேன்
பாரினிற் பொலிபபோற் பவழவித ழதிலமுது
பசியபட் டாடை நனைய
பண்டயன் மால்தேவர் கண்டுமெய் யருள்தந்த
பரமனடி யேத்து முனியே
தாரினிற் றிகழ்கடம் பன்கருணை தாங்கிநல்
தஞ்சமென் றினிது பணியும்
தத்துவா தீதமுணர் வாணர்க ளுதாரணே
தன்னல முனிந்த தகையே
சீரினிற் பெரிதாய வழகன் குளத்ததிர
சிறுபறை முழக்கி யருளே!
செழுமலர்ப் போதனைய செங்கைகொ டெடுத்திங்கு
சிறுபறை முழக்கி யருளே! 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திவான் திகழுமதி யணையதிரு மலரடியில்
அம்பொற் சிலம் பலம்ப
அணிகெழுமு தாரகையை மானுநன் னித்திலத்
தாரரிய மார்பு திகழப்
பந்தியார் வச்சிரக் குழைகளுயர் பரிதிபோல்
படருஞ் செவிக ளசையப்
பகருநல் லமுதுகனி தேனூறு மிதழ்களில்
படர்ந் துடல்ந லனைப்பவரிய
தந்திகன் பிறங்குதகு வழகன் குளத்துவளர்
தருமனே தரணி போற்றுந்
தாருவென வகிலமேல் மேவுமடி யார்கடம்
தாகந் தணிக்கும் நதியே
செந்திநா தன்கிருபை சேமித்த சித்தனே
சிறுபறை முழக்கி யருளே!
சித்தமிசை நித்தமமர் சித்ரமுத் தையனே
சிறுபறை முழக்கி யருளே! 71

இட்டமோ டுருவிசும் பதனில்வா னவர்கள்தினம்
ஏத்துமிறை யோன் கருணையே
இனியசொல் லாடல்புரி சமைய வாசாரமுறு
எழில்மிகு தவச் சிகரமே
மட்டவிழ் மலர்க்கவிதை யேதமிழர் சமுதாய
மணிவிளக் கேய முதமே
மதியிரவி மகிழுமழ கன்குளத் தோங்குநனி
மறைமுறை யறிந்த மகிபா
திட்டமா ரறநெறி பிடித்தொழுகு தெய்வமாய்த்
திகழுமா மெய்ஞ் ஞானியே
தீதிலழ கன்குளத் தாடுமுயர் மோனமே
தேடுமரு ளொளி விளக்கே
சிட்டர்கள் மனங்குளிர இட்டமொடு வந்துததி
சிறுபறை முழக்கி யருளே!
செப்புமெங் கவிதைப் பரம்பரை சிறக்கநனி
சிறுபறை முழக்கி யருளே! 72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னலந் திரைதவழு பாற்கடலி லரிதுயில்செய்
புனிதநா ரணனு மரிய
பிரமனுந் தேடவறி யாதமெய்ப் பரமனருள்
பெட்புமிகு முருக னருள்சேர்
கன்னலொடு கதலிமலி யழகன் குளப்பதி
கலந்துவாழ் கலைவள் ளலே
கடிகமழு மொருகதம் பந்தொடை யணிந்திலகு
கடவுள்தன் கண்ணி லாடி
இன்னல்தீர்த் தருளுமொளி மன்றம் அமைத்தெங்கும்
இன்பமிகு மிதய வானே
இன்னிசை முழங்குமழ கன்குள மிகுந்துவரும்
இமயமே இன் னமுதமே
சொன்னசொற் றவறுது சுற்றிவந் தடிதவழ
சிறுபறை முழக்கி யருளே!
செந்தமிழ்க் கவிவலார் சீர்கெட்ட நிலையொழிய
சிறுபறை முழக்கி யருளே! 73

## 9 சிற்றில் பருவம்
### வேறு

பங்கயன் மால்தின மேத்திடு மொருபர
மேசுர னருள் பாலன்
பாவலர் நாவலர் பாடி நிதம்பணி
பதும மலர்ப் பாதன்
கொங்கவி ழுங்கதிர் வரமே மணியே
கொற்ற வனே குணமார்
குடிசை யெலாம்புக ழற்புத னேஎங்
குறையது தீர்க்க வரும்
எங்கள் ஒளிமணி யேயெமை யாட்கொளும்
எந்தாய் தமிழா டும்
எழிலழ கன்குள மிதமா ரணியே
இசையே விறல் மேவுஞ்
செங்கையி லொளியுடை யாய்செக மேவிய
சிற்றில் சிதைத் தருளே!
சீர்பொலி மாதவ ரோடினி தாடிநீ
சிற்றில் சிதைத் தருளே! 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து தவத்துயர் முண்டகன் மால்பல
முனிவர்கள் யா வருமே
முறைமுறை யுனேச்சூழ்ந் தமர்ந்தே முதிர்மறை
முழுதும் முழங் கிடவே
இந்து முடித்தரு ளீசனு மிறைவியும்
இந்திரன் முத லாய
இமயவ ருந்தம திதய மகிழ்ந்திட
ஏந்திடு மரு ளொளியே
நந்து முழங்கொளிர் கங்கையில் வந்துறு
நாதனி னரு ளடியா
நாட்டம் இறைபால் நாட்டிய முத்தே
நற்றமி ழுறி வூற்றே
சிந்து மலங்கிர்தச் சித்திர முத்தே
சிற்றில் சிதைத் தருளே
சித்த முவந்துறு துணேவர்க டம்மொடு
சிற்றில் சிதைத் தருளே. 75

பவவடி வாகிய படிறர்க ளுளமதில்
படியா தொரு வானில்
பலமற் றிடுசுரர் நிலேபெற் றிடவரு
பதியே யற மோது
தவவடி வாகிய முனிவர்த மகமது
தங்கிய குரு வடிவே
தனியற் புதநட மிடுதவ னேமிகு
தகைசேர் குள வாசா
நவவடி வாகிய நாரண னும்நல்
நலமா ருத்தி ரனும்
நான்முகன் தூயம கேசனு டன்நனி
நாடுதற் கரிய சதா
சிவவடி வாகிய சண்முக நேயா
சிற்றில் சிதைத் தருளே!
செப்புங் கவிவலர் செந்தமிழ் பாடிட
சிற்றில் சிதைத் தருளே! 76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கு திமிர்ந்த கதம்ப மணிந்தவெங்
குருவே விறல் மேவும்
கோதறு பாவலர் நாவலர் போற்றிடுங்
குன்றே யினி தாக
எங்கு முறைந்திடு முந்தை பராபரன்
எழிலார் விழி மீதில்
எழிலியு மேழ்கடல் நீரு மவித்திடும்
எரிவடி வாகி நனி
தங்கு திரைச்சர வணனடி பற்றித்
தவழ்ந்து விளை யாடித்
தமிழக மேலொளி ரழகன் குளமதில்
தங்கிடு மா முனியே
செங்கை தனில்பெறும் அருளொளி சிந்தச்
சிற்றில் சிதைத் தருளே!
செகமது போற்றிடச் செய்தவ மேற்றிடச்
சிற்றில் சிதைத் தருளே! 77

வாரிக் கடலமு தோகைப் படுநெடு
வானவ ருண்டு நனி
வாழத் திருவுட னுழிப் படையுடை
வள்ளல் வழங்க வரு
காரிக தித்தெழ வோடிச் சுரரொடு
கண்ணுத லின் கழலே
கதியென் றழுபவர் மதிகண் டன்பொடு
கண்ட மமர்த்தி மலை
நாரிக் கொருபுற மாகத் திருபரன்
நாதர்க் குய ரடியா!
நாடற் குறுதிரு வேநவை யற்றுளிர்
ஞாலத் துயர் தூயா!
சீரிக் கழகன் குளமமர் வேதா
சிற்றில் சிதைத் தருளே!
செம்பொற் கழலணி சித்திர முத்தா,
சிற்றில் சிதைத் தருளே! 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுச் சிகரந் தனிலொளி போல்வரு
குறைநீத் தருள் வோளே
குறைவறு ஞானநி தான புராதன
கொற்றவை யாத வனே
நன்றுநின் றேதவ நண்பர்க ளேத்திடு
நாயக மா மணியே
நல்லவ னேதவ மாதவ னேநனி
நன்மைகள் செய் பவனே
என்று மீறைஞ்சிடு மிறையடி யார்க்கிங்
கெளிதினில் புரி பவனே
எந்தை பராபர னருளழ கன்குள
மிருந்திடு மற் புதனே
துன்றுநி லத்தொளிர் தூய்மை நிறைந்தெழ
சிற்றில் சிதைத் தருளே!
தோமில் வளந்தரு துங்கவனேத்தி
சிற்றில் சிதைத் தருளே! 79

ஆர்கலி சுற்றிய நேமி யளந்திடும்
அண்ணலு மளி பாடும்
அம்புய மீதுறை வானு மறிந்திட
அடிமுடி தேடி முனம்
கார்கள் முழங்கிடு வானுங் கடுமலி
கட்செவி வாழ் பதியுங்
கதிமிகு ோனமு மெயினமு மாகிமுன்
கண்டறி யா தொளிரும்
ஏர்கரு ணாகர வெந்தை பரன்மகிழ்
எம்பெரு மா னுனையே
ஏத்திடு மன்பர்க ளிருவினை தீர்த்தினி
எழுபிறப் பெய்தா நல்
சீர்கள்சி றந்தெழு மழகன்கு ளந்தொழ
சிற்றில் சிதைத் தருளே!
செந்தமிழ் வாணர் சிறந்து குலுங்கிட
சிற்றில் சிதைத் தருளே! 80

87314
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்க ளிளம்பிறை நேர்நுதல் மீதினில்
தீதில் மணிச் சுடிகை
தேசுறு முடுவின மெனவொளிர் நித்திலந்
திகழ்தரு கண் டிகையும்
பங்க மில்பொன்வள்ளை யொடுகொலு சொலியிடப்
பதும மலர்ப் பதமும
பசிய கடம்ப மணிந்துறு முச்சியில்
பதிய வெனத் தூவி
கொங்க விழ்மாமலர்க் கொக்கு மலிந்துறு
கோதில் லா வழகன்
குளமே லடியவர் கூடி நிதம்பணி
குணமே நறு மணமே
தங்க மெனப்புகல் தருமத் தருவே
சிற்றில் சிதைத் தருளே!
செயசெய வெனநட மிடுமொளி முத்தா
சிற்றில் சிதைத் தருளே! 81

வந்தனை செய்தடி போற்றிடு வானவர்
வளமதை நல்க வுயர்
வரைதனில் வருதிரி புரையுமை யாளுடன்
வார்சடை யான் விழியில்
தந்தத யாநிதி தம்மை நிதம்பணி
தத்துவ மெய்த் தளமே
தாதவிழ் நீப மலர்த்தொடை யாய்மகிழ்
தகுமழ கன்குள மேரர்
சிந்தா நீர்க்குட மேதமி ழழகொளிர்
சித்திர நித் திலமே
செல்வக் கவிதைகள் பாடிட ஆடிட
செழுமை மலர்ப் பாதம்
சிந்தனை செய்பவர் நெஞ்சுறை சித்தா
சிற்றில் சிதைத் தருளே!
சீர்மிகு சித்திர முத்த னெனத்தொழ
சிற்றில் சிதைத் தருளே! 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

பவளத் துயர்நால் காலெழுப்பிப்
பணிமா மணியின் விட்டமிட்டுப்
பார்மேல் பச்சை அச்சமர்த்திப்
பசும்பொன் னுருளை தனைப்பூட்டி
திவள்சீர்ப் பதுமஇ ராகமதால்
திறலா ராணி யிறுக்கியொரு
தீதில் வைடூ ரியக்கொடுங்கை
சேர்த்தே வயிரக் கூம்பமைத்துத்
தவளத் தொளிர்நல் தாரமதால்
தனியோர் நாப்பண் அதுநிறுவித்
தலஞ்சூ ழாழித் தரளமதால்
தகைசேர் தூய வடம்பூட்டிக்
கவளக் களிற்றுக் கிளைபோல்செங்
கரத்தால் சிறுதே ருருட்டியருள்
கவினு ரழகன் குளப்பதிவாழ்
கனியே சிறுதே ருருட்டியருள்! 83

மகரந் துதைந்த முகைத்தோடு
மந்தி குடைந்துண் டிறுமாந்து
மறவாக் கரும்புள் ளுடன்நாளும்
மருவுங் குவளை மலர்ப்பாதா
தகரந் தணர்தம் வேள்விதனில்
தழைத்தேழ் தலமுந் தாம்நடுங்கத்
தருக்கால் வருமத் தண்ணகத்தைத்
தனியாம் பரியாய்க் கொண்டகுகன்
பகரந் தமிலான் பாசவெழில்
பத்தா வடியார் தினம்போற்றும்
பதியே பத்த சிகாமணியே
படிமே லறிஞர் புகழுமரும்
சிகரந் திகழழ கங்குளஞ்சேர்
சித்ரா சிறுதே ருருட்டியருள்
செயமே வியசித் திரமுத்தத்
தேவே சிறுதே ருருட்டியருள்! 84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணும் மலையும் மலர்ச்சுனையும்
மதிதன் நிலவு மலிந்ததிரு
மணிமண் டபமும் மறையவன்முன்
மருவும் பதியும் மாட்சிமிகும்
விண்ணும் விபுதர் வாழ்மனையும்
விறலார் குபேரன் றனதூரும்
விளையாட் டயரும் விமலாமெய்
விகிர்தா விமைய மலைக்கிறைமுன்
பண்ணுந் தவத்தால் கருப்பாயி
பைந்தொடி புவிக்கருள் புதல்வாமெய்ப்
பாதா புலவோர் பணிந்தேத்தும்
பதியே அழகன் குளமேறே
கண்ணுள் மணியே கருதுந்திருக்
கரத்தால் சிறுதே ருருட்டியருள்!
கவிஞர் ஞானக்க லாநிதிநேர்
கலையே சிறுதே ருருட்டியருள்! 85

பண்ணிற் பொலிந்த பசுந்தமிழ்நூல்
பனுவ லகத்துள் பகுத்தறிந்து
பகரா வேழை யெமைப்படைத்த
பதியே சித்திர முத்தரசே
கண்ணிற் கொருமா மணியேவான்
கமழ்தேன் துளிக்குங் கற்பகமே
கனகச் சிலம்பு கலந்திலங்கும்
காலா வடியேம் கடைத்தேற
மண்ணிற் பிறங்குங் குருவேநான்
மறைக்கொரு புதல்லா மதியாதார்
மனத்துள் பதியா தருந்தவர்தம்
மனத்தே குடிகொண் டிருந்தொளிகூர்
விண்ணிற் புகழழ கன்குளம்வாழ்
விமலா சிறுதே ருருட்டியருள்!
வித்தக் னேதமிழ் விகசிதமாய்
விளையுஞ் சிறுதே ருருட்டியருள்! 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருண்மா வடவை மகிழ்ந்துணவேர்
வருக்கைக் கனிகீண் டினிதளிக்க
மந்தித னக்கொரு கடுவனுயர்
மாழைக் கனியீந் திடுமரிய
இருண்மா ஞாலத் தவர்க்கரிதாய்
இரவி நெடுவான் கதிர்பரப்ப
விண்டை மகரமி றைத்து நனி
இதழே விரிக்குங் குளப்பதிதன்
பொருண்மா சொன்றுமி லாதபரன்
பொன்னருள் சேர்தவப் பெருமானே
பொய்யா ரடியேம் பிழைபொறுத்தாள்
புலவர் குழாத்தவர் புரவலனே
எருண்மா தவர்கள் தினம்போற்றும்
எழிலே சிறுதே ருருட்டியருள்!
ஏழைபங் காளா இறைத்தூதா
இனிதே சிறுதே ருருட்டியருள்! 87

நீத்தார் பெருமைநி னைந்துலகில்
நிலையார் வீடு கொடுக்குமுயர்
நிமலா வமரர்தொ ழுந்தூய
நித்தா கவின்சேர் குளம்பிறந்த
ஆத்தாட் கரிய திருமகனே
அரசே வருக்கனி னருளொளியே
அத்தா கவிஞர்த மகத்தில்வளர்
அமுதே அன்பே ருழுநிலமே
ஏத்தா துன்தாள் இருந்திடுமிவ்
எளியேர்க் கிரங்கா யோஞானத்(து)
எழிலா ரழகன் குளமேவி
இருப்பா யடியேம் வினையகலக்
காத்தாள் பவனே நினதுமலர்க்
கரத்தால் சிறுதே ருருட்டியருள்!
கவிசொல் சுரரைக் காத்துவரும்
கரத்தால் சிறுதே ருருட்டியருள்! 88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திச் சசிசெஞ்ச டாடவிக்கோர்
அழகாய்ச் சூடும் ஆதிபரன்
அகிலத் துயிர்தந் திடுந்தூய
அமலை யுமையா ளுடனளித்த
தொந்தியி னருள்கொள் துணைவாசெந்
தமிழ்நூற் புலவா தனிவேதத்
தலைவா தொழுவோர் துயர்தீர்க்கும்
தகையே அழகன் குளவேந்தே
மந்திக் கரிய கனியளித்தே
மகிழ்வோர் கடுவன் மலர்க்கிளையில்
மருவு மரும்மலை யாசியத்தின்
மன்னு மருளொளி மாதவனே
செந்திக் கினியாய் சத்தியத்தெஞ்
செல்வா சிறுதே ருருட்டியருள்!
சீரார் மலர்சித் திரமுத்தா
செம்பொற் சிறுதே ருருட்டியருள்! 89
(மலையாசியம் — மலேசியா)

கண்டுங் கனியுந் தீம்பாலும்
கமழ்பூந் தேனுஞ் சேர்மலையக்
கலசத் திட்ட தெனக்கவிஞர்
கலைமுத் தமிழைக் கலந்தெடுத்துப்
பண்டுன் பாதந் தனையகத்தால்
பணிந்தே யுருகி அனுதினமும்
பாரிற் புலவோர் சூட்டுமருள்
பாவுக் குகந்த பெருமமுதே
ஞண்டும் வராலும் ஞாதியர்போல்
ஞான்றுங் கலந்து வாழவன்பால்
ஞான வடிவாய்த் திகழ்மலைய
நாடு நாடும் நாயகமே
வண்டும் கடம்ப மலர்த்தொடைகொள்
வரதா சிறுதே ருருட்டியருள்!
வையக வல்லார் வழுத்து மரும்
வள்ளால் சிறுதே ருருட்டியருள்! 90
(மலையம், மலையநாடு — மலாய்நாடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIB
JAFFNA.



செழுந்தே னூறுஞ் செய்யமலர்ச்
செல்வன் றிருமாற் கரியசிவன்
சிமையத் திறைமுன் செய்தவத்தால்
திகழும் தோகை மணிச்சிலம்பு
வழுந்தாட் கௌரி யுடனளித்த
வத்தா சித்திர முத்தரசே
அமலா மறைகட் கரியபெரும்
அன்பே அடியார் தினம்போற்றித்
தொழுந்தாள் பெரியோய் எமக்காகச்
சுடரொளி தாங்க வருமரிய
தூயா வடியேம் ஏற்றபெருந்
துணையே ஒளியில் துதைந்துதினம்
எழுஞ்சீ ரழகன் குளமமர்ந்த
எந்தாய் சிறுதே ருருட்டியருள்!
எதிர்வே றில்லா திலங்குமெழில்
இறையே சிறுதே ருருட்டியருள்! 91

கொங்குண் டறுகால் ஞிமிறுமெழில்
குவளைப் பொகுட்டிற் குடியேறுங்
கோவுங் காவற் கடவுளுந்தங்
குறைதீர்த் திடவே யோடிநனி
அங்குண் டிங்குண் டெனத்தேடி
அறியா ஆதிப் பரனருளே
அய்யா அமைதிக் குணக்குன்றே
அரசே அன்புக் கொருகடலே
பொங்கு மரும்புத் தமுதுண்டு
புவிமே லாடும் புலவாநேர்
போதா புவியோர் போற்றவரும்
புனிதா வழகன் குளவாசா
தங்குந் தைப்பிங் தமிழர்க்காய்த்
தனியே சிறுதே ருருட்டியருள்!
தவளத் தொளிர்சித் திரமுத்தே
தலைவா சிறுதே ருருட்டியருள்! 92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2426 c c

## வாழி

### வேறு

காட்சியால் கருத்தால் காணுங் காவியப் பொருள்கள் வாழி
ஆட்சியால் தழைத்து ஞான்று மருமலே சியத்தாய் வாழி!
மாட்சிசா லான்மச் சாந்தி மதிப்புறு மன்றம் வாழி!
நீட்சிலே நிகர்க்கு முத்தன் நித்தமும் வாழி வாழி!

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அருளொளி நிலையம். 31/21. டோரக[illegible]
கொழும்பு.2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org